## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மானுடவியல் மற்றும் சமூகவியல் உயர் கல்விக்கான தேசிய நிலையத்தில் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154(6) உறுப்புரை பிரகாரம் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

நிலையத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.
இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்வி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

-----------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிலையத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிலையத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து நிலையத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது நிலையத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

---------------------

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

--------------------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிலையத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

**1.6 சட்டங்கள்,விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை.**

| சட்டங்கள்,விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| 2005 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க மானுடவியல் மற்றும் சமூகவியல் ஒழுங்குவிதிகளில் 16(1) பந்தி | 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலான 11 ஆண்டுகளின் பொருட்டு பணிப்பாளர் பதவிகளுக்கு முழுநேரகால பணிப்பாளரை நியமனம் செய்திருக்கவில்லை என்பதுடன், அந்த காலப்பகுதிக்குள் பதில் கடமையாற்றும் அடிப்படையில் சேவையாற்றியிருந்த பணிப்பாளர்களுக்கு ரூபா.3,074,812 சம்பளம் மற்றும் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. இப் பதவியின் பொருட்டு முழுநேர காலத்திற்கு பணிப்பாளர் ஒருவரை நியமனம் செய்யாமை நிறுவனத்தின் செயலாற்றுகை இலக்குகளை அடைந்துக்கொள்கையில் பாதகமாக அமைந்துள்ளதென கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. | மானுடவியல் மற்றும் சமூகவியல் உயர் கல்விக்கான தேசிய நிலையத்தின் பணிப்பாளர் பதவிகளுக்காக ரிஜன்ட் கவுன்சிலின் பரிந்துரைமீது நியமன அதிகாரியான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்படுகிறது. அதேபோன்று பதில் கடமையாற்றும் அடிப்படையில் பணியாற்றியிருந்த பணிப்பாளர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவாக அதற்கான சுற்றுநிருபங்களின் பிரகாரம் பணியாற்றப்பட்டுள்ளது. | ஒழுங்குவிதியின் பிரிவு பிரகாரம் முழுநேர பணிப்பாளர் ஒருவரை நியமனம் செய்து நிலையத்தின் செயலாற்றுகை இலக்குகளை அடைதல் வேண்டும் |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைபயன்**

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயனாக ரூபா.19,803,096 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டில் பற்றாக்குறை ரூபா.111,357,311 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா.91,554,215 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு கலாநிதி பட்டப் படிப்புக்கான அளிப்புகள் மற்றும் முது தத்துவமானி அளிப்புகளுக்கு வழங்கப்பட்ட செலவினம் குறைதல் காரணமாகியது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 மகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிலையத்தால் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பிணையில் வரையறுக்கப்பட்ட கம்பெனியாக 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படும் வகையில் NCAS Campus என்ற பெயரில் நிறுவனமொன்றை தாபிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. அவ்வாறு தீர்மானிக்கப்பட்டு மீளாய்விற்கான ஆண்டின்போது 04 ஆண்டுகளை அண்மித்திருப்பினும், அதன் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களுடன் NCAS Campus நிறுவனத்தின் நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்கு இயலவில்லை. அதேபோன்று நிருவாகம் செய்த முகாமைத்துவ குழுவாலும் NCAS Campus நிறுவனத்தின் நடவடிக்கைகளை முன்னெடுப்பதில்லை என்று தீர்மானித்து 2020 சனவரி மாதம் கம்பெனி ரெஜிஸ்டார் அலுவலகத்திடம் சட்ட ரீதியாக ஆவணங்களை கையளிக்கப்பட்டு NCAS Campus நிறுவனத்தின் பதிவினை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. | நிலையத்தின்கீழ் நிறுவனம் தாபிக்கையில் அந்த நிறுவனங்களுக்கான நோக்கங்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளை உறுதியாக அடையாளம் காணப்பட்டு நிறுவனங்களை தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.2 தொழில்பாட்டு வினைதிறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றில் தத்துவமானி மற்றும் முது தத்துவமானி பட்டப் படிப்பு கற்கைகளை கற்பதற்காக நிறுவனத்தில் சேவையாற்றும் முகாமையாளரிடம் 2015 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் ரூபா.600,000 ஆன தொகை விடுவிக்கப்பட்டு அந்த மாதம் தொடக்கம் 2017 ஆம் ஆண்டு இறுதி வரை கற்கை லீவு அங்கீகரிக்கப்பட்டிருப்பினும், மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் கற்கை நடவடிக்கைகளை பூர்த்தி செய்யப்படவில்லை. | நிறுவனத்தில் சேவையாற்றும் முகாமையாளரால் ஒரு வாரத்திற்கு 2 1/2 நாள்படி 2015 ஆம் ஆண்டில் கற்கை லீவு பெற்றுக்கொண்டுள்ள போதும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு லீவு பெற்றுக்கொள்ளவில்லை.<br>அதேபோன்று அவர் 2016.07.10 ஆந் திகதி வரை அவரின் கற்கை நடவடிக்கைகளின் முன்னேற்ற அறிக்கைகளை நிறுவனத்திடம் வழங்கப்பட்டுள்ளது. | அளிப்புகள் மற்றும் கற்கை லீவுகள் பெற்றுக்கொண்ட அலுவலர் சம்பந்தப்பட்ட கற்கைநெறி பூர்த்தி செய்யப்ப-டாமை தொடர்பில் தேவையான எதிர்கால நடவடிக்கைகளை நிலையத்தால் மேற்கொள்ளுதல் வேண்டும் |
| (ii) | 2005 ஆம் ஆண்டு தொட்கம் 2015 ஆம் ஆண்டு வரை தத்துவமானி மற்றும் முதுதத்துவமானி | 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை பட்டப் படிப்பினை பூர்த்தி செய்யப்படாத | அளிப்புகளை பெற்றுள்ள அளிப்பு பெறுநர்கள் உரிய கல்வி |

| | | | |
|---|---|---|---|
| | பட்டப்படிப்புகளின் பொருட்டு ரூபா.172,112,189 தொகை வழங்கியிருந்த 90 அளிப்பு பெறுநர்களால் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியிலும் கற்கை நடவடிக்கைகள் பூர்த்தி செய்திருக்கவில்லை. | 18 அளிப்பு பெறுநர்களில் 11 பேர் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளை பல்கலைக்கழகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன், இரண்டு அளிப்பு பெறுநர்கள் தொடர்பில் பல்கலைக்கழகம்மூலம் சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய அளிப்பு பெறுநர்களின் கோரிக்கைகள் தொடர்பில் முகாமைத்துவ குழு எதிர்வருங் காலத்தில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதுடன், எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாத அளிப்பு பெறுநர்கள் தொடர்பாக ஒவ்வொரு பல்கலைக்கழகமும் தேவையான நடவடிக்கை மேற்கொள்கின்றது. 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை 72 அளிப்பு பெறுநர்களின் பட்டப்படிப்பு பூர்த்தி செய்வதற்காக 06 ஆண்டு காலம் சென்றுள்ளபடியால் உரிய தாமதங்கள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டில் செயற்பட்ட முகாமைத்துவ சபையால் தீர்மானம் எடுக்கப்படவில்லை. | நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தொடர்பில் அவ்வப்போது உயர் கல்வி நிறுவனங்கள்ஊடாக பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிறுவனம் பொறுப்பு கூற வேண்டுமென்பதுடன், பட்டப் படிப்பை பூர்த்தி செய்வதற்கு ஏற்புடையதான தகவல்களை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல் வேண்டும். |
| (iii) | கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு இணைந்துள்ள கணினி கல்வி நிறுவனத்தின் சேவையாற்றிய பணிப்பாளர் மற்றும் இரண்டு மாணவர்களுக்கு அவர்களின் முது தத்துவமானி பட்டப் படிப்பினை பூர்த்தி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டு நவம்பர் 04 ஆந் திகதி ரூபா.800,000 ஆன தொகை அளிப்புகளாக வழங்கப்பட்டிருப்பினும், அந்த அளிப்புகளுக்கான கல்வி நடவடிக்கைகள் மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | UCSC நிறுவனத்தின் சிரேட்ட விரிவுரையாளர் ஒருவர் மற்றும் இரண்டு மாணவர்களால் அந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி பொருட்டு, அந்த நிறுவ-னத்தின் பணிப்பாளரால் தேசிய நிலையத்திலிருந்து அளிப்புகளின் பொருட்டு விண்ணப்பிக்கப்பட்டி-ருந்தது. முகாமைத்தவ சபையின் அனுமதிமீது வழங்கப்பட்டுள்ளதுடன், கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஒரு முன்னேற்ற அறிக்கை நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று அதன் எதிர்கால நடவடிக்கைகளை வினவி எம்மால் நினைவூட்டல் கடிதங்கள் UCSC நிறுவனத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | முதுமானி பட்டப் படிப்புக்காக அளிப்புகளை பெற்றுக்கொண்ட பட்டதாரிகள் உரிய கற்கை நெறிகளை உரிய திகதியில் பூர்த்தி செய்யப்படுவதாக நிலையத்தால் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (iv) | 2019 ஆண்டில் செயற்றிட்டம்படி முதுமாணி பட்டப் படிப்பு மற்றும் முதுதத்துவமானி பட்டப் படிப்பை கற்பதற்காக தற்போது அளிப்புகளை பெற்றுக்கொண்- | NCAS நிறுவனம்மூலம் ஆண்டுக்கு இரண்டு முறை NCAS அளிப்பு மற்றும் Queensland University of Technology (QUT) - NCAS | செயற்றிட்டத்தில் இலக்-குகளை உள்ளடக்கும்-போது நிலையத்திற்கு எய்துக்கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | டுள்ள 50 அளிப்பு பெறுநர்களுக்கும் 40 புதிய அளிப்பு பெறுநர்களுக்கும் அளிப்புகளை வழங்குவதற்காக ஒழுங்கு முறையில் ரூபா.45 மில்லியன் மற்றும் ரூபா.18.2 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஆயினும், மீளாய்விற்கான ஆண்டில் தற்போது அளிப்புகளை பெற்றுக்கொண்டுள்ள 27 பட்டநிலை பின்படிப்பு பட்டதாரிகளிடம் ரூபா.33 மில்லியன் தொகையும் 8 புதிய அளிப்பு பெறுநர்களிடம் ரூபா.14.3 மில்லியன் தொகையும் வழங்கப்பட்டிருந்தது. | புலமைப் பரிசில் வழங்கப்படினும், 2019 ஆம் ஆண்டில் நிலவிய நிதிசார் சிரமங்கள் காரணமாக ஒரு சுற்றில் மட்டும் அளிப்புகள் வழங்கப்பட்டன. அதன்போது 11 அளிப்பு பெறுநர்-களை தெரிவு செய்துள்ளதுடன், அந்த தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கையில் ஆகக் குறைந்த தகைமைகளை பூர்த்தி செய்திருந்த 08 பேருக்கு அளிப்பு வழங்க-ப்பட்டது. எஞ்சிய அளிப்பு பெறுநர்களால் தேவையான ஆகக் குறைந்த தகைமைகளை பூர்த்தி செய்த பின்னர் மற்றும் தேவையான கடித ஆவணங்களை சமர்ப்பித்த பின்னர் கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள-ப்படவுள்ளது.<br>ஆகையால் செயற்-றிட்டம் திருத்தம் செய்யப்பட்டு அதற்கு முகாமைத்துவ குழுவின் அனுமதி பெற்றுக்கொள்ள-ப்பட்டுள்ளது. | முடியுமான இலக்குகளை உள்ளடக்குவதற்கும், அந்த இலக்கு-களை அடைந்துக் கொள்வதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தலும் வேண்டும். |
| (v) | பட்டநிலை பின் படிப்பு கற்கைநெறிகளை கற்பதற்கு ஏனைய நிறுவனங்களுடன் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்வதன்கீழ் உயர் கல்வி அமைச்சு மற்றும் Queensland University of Technology Brisbane – Australia ஆகிய நிறுவனங்களுடன் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் எதிர்வரும் 05 ஆண்டு காலப் பகுதிக்கு ஏற்புடையதாக ஒப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை பிரகாரம் ஓராண்டுக்கு 06 பட்டநிலை பின் படிப்பு பட்டதாரிகள் பிரகாரம் 06 ஆண்டுகளுக்குள் 36 பட்டதாரிகளுக்கு பட்டநிலை பின் படிப்பு கற்கை நெறிகளை கற்பதற்கு அளிப்புகளை வழங்கப்பட வேண்டியிருந்தது. ஆயினும் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை 22 அளிப்பு பெறுநர்களிடம் மட்டும் அளிப்புகளை வழங்கியதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட 14 அளிப்பு பெறுநர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெறவில்லை. அதேபோன்று பட்டநிலை பின் படிப்பு பட்டம் வழங்கும் நோக்கத்தில் வெளியக நிறுவனங்களுடன் புரிந்துணர்வு | 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை 05 ஆண்டு காலப் பகுதிக்குள் தெரிவு செய்யப்பட்ட 28 அளிப்பு பெறுநர்க-ளுக்கிடையில் பரிந்துரைக்கப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்திருந்த 26 அளிப்பு பெறுநர்களிடம் அளிப்புகள் வழங்கப்பட்டன.<br>விண்ணப்பத்தாரிகளால் கட்டாயம் பெறப்பட வேண்டிய IELTS சித்தி மற்றும் ஏனைய காரணங்களின்மீது சில ஆண்டுகளில் அளிப்புகளை வழங்குவதற்கு முடியவில்லை.<br><br>2019 ஆம் ஆண்டில் நிலவிய நிதி சிரமங்கள் காரணமாக QUT வழங்கப்படவில்லை என்பதுடன், அது திருத்தம் செய்யப்பட்ட செயற்றிட்டத்தில் காண்பிக்கப்பட்டு அதற்கு முகாமைத்துவ குழுவின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | பட்டப்படிப்பு அளிப்புகளை வழங்கும் நோக்கத்தில் வெளியக நிறுவனங்களுடன் புரிந்-துணர்வு உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களை மேலும் அதிகரித்துக்கொள்வதற்கும், அவ்வாறு மேற்கொள்கின்ற உடன்படிக்கைகளின்படி அளிப்பு-களை வழங்குவதற்கும் நிலையத்தால் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உடன்படிக்கை மேற்கொள்வதன் தேவையிருப்பினும், 2013 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு வரை ஒரு நிறுவனத்துடன் மட்டும் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |

### 3.3 நிதியங்களின் குறைப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டில் சொத்துக்களை மேம்படுத்தல் மற்றும் புனரமைப்பு பொருட்டு வழங்கியிருந்த ரூபா.1,250,000 மற்றும் தேசிய நிலையத்தின் ஆராய்ச்சிகள் உள்ளடக்கிய நூல்கள் பொருட்டு (NCAS வெளியீடுகள்) வழங்கியிருந்த ரூபா.300,000 ஆன தொகை உரிய நோக்கத்தின் பொருட்டு உபயோகப்படுத்தவில்லை. | சம்பந்தப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு நடவ-டிக்கை மேற்கொள்கின்றேன். வெளியீடுகளின் பொருட்டு வழங்கி-யிருந்த ரூபா.300,000 ஆன பணத் தொகையினை வழங்குவ-தற்கு தேவையான விண்ணப்பங்-களை கோருவதற்காக நடவடிக்கை மேற்-கொண்ட போதிலும், எதுவித விண்ணப்பமும் கிடைக்கப்பெற வில்லை என்பதுடன், அதனால் அவ்வப்போது விண்ணப்பங்கள் கோரும் திகதியை பிற்போடுவதற்கு நடவடிக்கை மெற்கொள்-ளப்பட்டுள்ளது. | நிலையத்தின் நிதி வழங்கப்பட்டுள்ள நோக்கத்தின் பொருட்டு உபயோகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிமுறை மற்றும் நல்லாட்சி

### 4.1 வருடாந்த செயற்றிட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (i) அரச பல்கலைக்கழக முறைமையினுள் முதுமாணி பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் நோக்கத்துடன் நிலையம் பொருட்டு 2019 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட செயற்றிட்டம் படி கல்வி சார் மற்றும் கல்விசாரா பணியாற்தொகுதியில் உள்ள 280 எண்ணிக்கையினறுக்கு 13 பயிற்சி பட்டறைகள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், 07 செயலமர்வுகளை மட்டும் நடாத்தப்பட்டடிருந்தது. அதேபோன்று அதில் பங்குபற்றியிருந்த அலுவலர்களின் எண்ணிக்கை 88 பேர் மட்டுமாவதுடன், அவர்களுக்கிடையில் | 2019 ஆம் ஆண்டின் பொருட்டு தயாரிக்கப்பட்டிருந்த செயற்றிட்டம்படி கல்விசார் பணியாற்தொகுதியினரின் பொருட்டு 08 செயலமர்வுகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டது. ஆயினும் 2019 அம் ஆண்டில் 09 செயலமர்வுகளை நடாத்துவதற்கு இயன்றது.<br>Research Methodology- 02<br>AMOS- 02<br>SMART PLC- 02<br>SPSS -03 | செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டு ள்ள நோக்கங்களை நிறைவேற்றிக்கெ ாள் வதற்கு நடவடிக்கை-களை மேற்கொள்-ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அரச பல்கலைக்கழக முறைமையினுள் பங்குபற்றியிருந்த அலுவலர்களின் எண்ணிக்கை 52 பேர் மட்டுமாவார்கள். | | |
| (ii) | செயற்றிட்டத்தில் பல்கலைக்கழக முறைமையில் நிருவாக மற்றும் கல்விசாரா பணியாற்தொகுதியில் ஆற்றல் விருத்தியின்கீழ் 04 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்மூலம் 100 அலுவலர்களை பயிற்றுவிப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், மீளாய்விற்கான ஆண்டில் எந்தவொரு நிகழ்ச்சித்திட்டத்தினையும் நடைமுறைப்படுத்தாமை காரணமாக அந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்புடையதான நோக்கங்களை நிறைவேற்றப்படவில்லை. | விண்ணப்பங்களை கோரி தெரிவு செய்து கொள்ளப்பட்ட வளப்பகிர்வாளர்களை தொடர்பு படுத்திக்கொண்டு கற்கைநெறிகளை நடாத்தும்படி முகாமைத்துவ குழுவால் தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் அவ்வாறு விண்ணப்பங்களை கோரினாலும், பொருத்தமான வளப்பகிர்வாளர்களை தெரிவு செய்வ-தற்கு இயலாதபடியால் குறித்த கற்கைநெறிகளை நடாத்துவதற்கு முடியவில்லை. | செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்-றிக் கொள்வதற்கு பணியாற்றுதல் வேண்டும். |